# சத்துணவு மைய சமையல் உதவியாளர் பணிக்கு விண்ணப்பம்

**சிவகங்கை, ஏப்.11–**

மாவட்ட அளவில் பள்ளிகளில் செயல்படும் சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 427 சமையல் உதவியாளர் பணிக்கு நேரடி தேர்வு நடைபெற உள்ளதாக கலெக்டர் ஆஷா அஜித் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது, மாவட்ட அளவில் அரசு பள்ளி சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 427 சமையல் உதவியாளர் பணிக்கான இன சுழற்சி அந்தந்த வட்டார அலுவலகங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

சமையல் உதவியாளருக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ.3,000 வழங்கப்படும்.

ஓராண்டிற்கு பின் சிறப்பு கால முறை சம்பளம் வழங்கப்படும். இதற்கு வயது 21 முதல் 40 க்குள் உள்ள பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். பணி நியமனம் செய்யப்படும் சத்துணவு மையத்தில் இருந்து, 3 கி.மீ., க்குள் வசிக்க வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை ஏப்., 26க்குள் அந்தந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மட்டுமே வழங்க வேண்டும். விண்ணப்பத்துடன் பள்ளி மாற்று சான்று, எஸ்.எஸ்.எல்.சி., மதிப்பெண் சான்று, ரேஷன் கார்டு, இருப்பிட சான்று, ஆதார் அட்டை, ஜாதி சான்று நகல் இணைக்க வேண்டும்.

விதவை, கணவரால் கைவிடப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் அதற்கான சான்று நகலை இணைக்க வேண்டும். நேர்முக தேர்வின் போது அசல் சான்று கொண்டு வர வேண்டும்.